Find us on facebook/tamilmirror · Follow us on tamilmirror · epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 30 2024

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 30, 2024 | ஒளி: 09 கதிர் 241 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE




## ஆணைக்குழு அறிவுறுத்தல்

2007.01.31ஆம் திகதிக்கு முன்னர் பிறந்துள்ள பிரஜைகளின் பெயர்கள், வாக்காளர் இடாப்பில் உள்ளதாவென கிராம அலுவலர்களிடம் உடனடியாக விசாரித்துக்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.



# “நான் செய்தது பெரும் தவறு”

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக முன்னிறுத்தியமை தனது வாழ்க்கையில் ஏற்பட்ட வரலாற்றுத் தவறு என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அழிவுக்குக் காரணமானவர்கள் இருவர் என்றும் இருவரும் தன்னை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கியதாகவும், எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பதில் தலைவராக பதவியை வகிக்கும் இடத்தில், கட்சியை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தேவையான ஆதரவை வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் திங்கட்கிழமை (29) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதனை கூறியுள்ளார்.

## சிறுவனை லண்டனுக்கு அனுப்பும் முயற்சி முறியடிப்பு

இங்கிலாந்தில் வசிக்கும் இலங்கைத் தாய் மற்றும் அவரது மகனின் தகவல்களைப் பயன்படுத்தி போலி ஆவணங்களைத் தயாரித்து, 17 வயதுடைய சிறுவனை இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்ல முயன்ற இரண்டு பெண்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெள்ளிக்கிழமை (26) கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர், சிறுவன் ஒருவருடன் இங்கிலாந்துக்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார்.

அவர்கள் கரும பீடத்துக்கு வந்தபோது, அவர்களின் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தினால் அவர்களை விமான நிலையத்தில் உள்ள குடிவரவுத் திணைக்களத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## மதுபான அனுமதியை விற்ற தமிழ் எம்.பி



மத்திய மாகாணத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், இரண்டு கோடி ரூபாவிற்கும் அதிகமான இரண்டு மதுபான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்த இரண்டு மதுபான அனுமதிப்பத்திரங்களையும் திகன பிரதேசத்தில் வர்த்தகர்கள் இருவருக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படுகின்றது.

அரசாங்கத்தில் இணைவதாக உறுதியளித்து இந்த இரண்டு மதுபான அனுமதிப்பத்திரங்களையும் அவர் பெற்றுள்ளார் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியானதையடுத்து, திகன பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் விகாரதிபதி, மதுபான அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தகர்கள் இருவரையும் அழைத்து இது தொடர்பில் கேட்டதற்கு, மேற்படி இரு அனுமதிப்பத்திரங்களும் மேற்படி பாராளுமன்ற அங்கத்தவரே வழங்கியதாக அவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் இந்த சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் விகாரதிபதி முறைப்பாடு செய்தார்.

தேர்தலில் ஆதரவைப் பெறுவதற்காக, எம்.பிக்கள் குழுவிற்கு, 200 மதுபான உரிமங்களை, அரசாங்கம் வழங்கியுள்ளதாகச் சமீபத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

தொடர்ச்சி P2

## “4/21 இல் பாதித்தோருக்கு 223 வீடுகளை வழங்கினோம்”




ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 223 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். மேலும் 11 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

223 குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 139 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. காணியுடன் கூடிய புதிய வீடு கட்டுதல், புதிய வீடுகள் கட்டுதல், வீடுகளைப் புனரமைப்பு செய்தல் போன்ற பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கம்பஹா கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தை அண்மித்த பகுதிகளில் அதிகளவான குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## பௌசிக்கு நோட்டீஸ்



அரசாங்கத்திற்கு 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான நஷ்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியை மே மாதம் 22ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, திங்கட்கிழமை (29) நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

2005ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நெதர்லாந்தில் இருந்து வழங்கப்பட்ட Land Cruiser வாகனத்தை மோசடி செய்து அரசாங்கத்திற்கு 10 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான நஷ்டம் ஏற்படுத்தியதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசிக்கு எதிராக இலஞ்சம் அல்லது-ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான-ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றம் சாட்டப்பட்ட ஏ.எச்.எம்.பௌசி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## 2 பேரணிகளை நடத்தும் SJB





ஐக்கிய மக்கள் சக்தி (SJB) இந்த ஆண்டு இரண்டு மே தின பேரணிகளை நடத்த உள்ளது, ஒரு பேரணி கொழும்பிலும் மற்றொன்று நுவரெலியாவிலும் நடத்தப்பட உள்ளது.

பிரதான பேரணி கொழும்பிலும் மற்றைய பேரணி நுவரெலியாவிலும் நடைபெறவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

“நுவரெலியாவில் நடைபெறும் பேரணியைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி (TPA) ஏற்பாடு செய்ய உள்ளது, ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் இரண்டு பேரணிகளிலும் பங்கேற்பார்” என்று அத்தநாயக்க கூறியுள்ளார்.

கொழும்பு மேதின ஊர்வலம் குணசிங்கபுரத்தில் இருந்து மதியம் 1 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



இலங்கையின் சனத்தொகையில் 10 சத வீதமானோர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறுநீரக நோயாளர் சங்கத்தின் பிரதம புரவலர் வைத்தியர் சஞ்சய் ஹெய்யன்துடுவ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு நீரிழிவு நோயே பிரதான காரணியாகக் காணப்படுவதாக விசேட வைத்தியர் டொக்டர் சஞ்சய் ஹெயன்துடுவ தெரிவித்துள்ளார்.

“நம் நாட்டில் சுமார் 10% பேருக்கு சிறுநீரக நோய் உள்ளது. உண்மையில் நோய் ஏற்பட பல்வேறு காரணிகள் உள்ளன. இந்த நோய்களைத் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

தொடர்ச்சி P2

## “ஒன்றுபடும் தேவை தற்போதும் எழுந்துள்ளது”



வ.சக்தி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறத் துடிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள், தமிழர்களது தீர்வு விடயம் சம்பந்தமான கருத்துக்களை முன் வைக்கவில்லை என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## Children of Gaza Fund கால எல்லை நீடிப்பு

காஸா மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு (Children of Gaza Fund) பங்களிப்புச் செய்வதற்கான கால எல்லை 2024 மே 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பங்களிக்க விரும்பும் நன்கொடையாளர்களுக்கு குறித்த திகதிக்கு முன்னர் தமது அன்பளிப்பை இலங்கை வங்கி தப்ரோபன் கிளையில் (747) 7040016 எனும் வங்கிக் கணக்கில் வைப்பு செய்து பற்றுச்சீட்டை 077-9730396 என்ற எண்ணுக்கு WhatsApp ஊடாக அனுப்புமாறு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.



# “பட்டியல் வெளியானதும் முடிவை அறிவிப்போம்”

கனகராசா சரவணன்

ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் அறிவித்த பின்னர், நாட்டை முன்னேற்றக் கூடிய வாய்ப்பு யாருக்கு இருக்கின்றதோ அவருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்று கிழக்கு மாகாண ஆளுநரும் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார் மட்டக்களப்பில் ஆளுநர் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டை யாரும் பொறுப்பு எடுக்காத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டை முன்னேற்றவேண்டுமென மிகுந்த முயற்சி எடுத்தார். இவ்வாறு செயலில் காட்டியுள்ள இந்த தலைவரை நம்பி பின்னால் போகும் போது எதிர்வரும் 5 வருடங்களில் அதிகமாக வளர்ச்சி அடைவதற்கான பக்குவம் அவரிடம் இருக்கின்றது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து அதைவிடுத்து ஒரு மாற்று முடிவுகள் எடுக்கும் போது அவர்கள் புது புது கொள்கைகள் மாற்றும் போது மக்கள் மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சிக்குள் போகும் வாய்ப்புக்கள் ஏற்படும் என்ற பெரிய அச்சம் இருக்கின்றது.

ஜனநாயக நாட்டில் யாரும் வேட்பாளராகப் போட்டிப் போடலாம் இருந்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் முடிவு என்னவென்றால் கடந்த 30 வருடத்துக்கு மேலாக எல்லோரும் வாக்களிக்க சந்தர்ப்பம் இருந்தபோதும் மலையக மக்கள் வாக்களிக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது அத்துடன், உரிமை இல்லாத மக்களாக.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மதுபான அனுமதியை விற்ற தமிழ் எம்.பி

எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எம்.பிக்கள் குழு கடந்த சில நாட்களாகப் பாராளுமன்றத்தில் இது குறித்து அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினர். ஆட்சிக்கு வந்தவுடன் வழங்கப்பட்ட அனைத்து மதுபான உரிமங்களையும் ரத்து செய்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# “4/21 இல் பாதித்தோருக்கு 223 வீடுகளை வழங்கினோம்”

கட்டுவாபிட்டிய தேவாலயத்துடன் தொடர்புடைய 144 குடும்பங்களுக்கு இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அந்த தேவாலயங்கள் தொடர்பான வீடமைப்பு திட்டத்திற்காக மாத்திரம் 90.855 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

கொச்சிக்கடை தேவாலயம் தொடர்பில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 09 குடும்பங்களுக்கு வீடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 5 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். வீடமைப்புத் திட்டத்தை விரைவாக முடிக்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, ஈஸ்டர் தினத்தன்று தாக்குதலுக்கு உள்ளான கட்டுவாப்பிட்டி தேவாலயத்திற்கு அரசாங்கம் புதிய ஞாயிறு அறநெறிப் பாடசாலை கட்டடத்தையும் நிர்மாணித்துள்ளது. இது புத்த சாசன, மத மற்றும் கலாசார அமைச்சினால் இதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 13 கோடிக்கு மேல். 14 வகுப்பறைகளைக் கொண்ட இந்த ஞாயிறு அறநெறிப் பாடசாலைக் கட்டடம் 02 மாடிகளைக் கொண்டது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு இதன் நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்றதுடன், கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி இக்கட்டடத்தை தேவாலயத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தது.

# “ஒன்றுபடும் தேவை தற்போதும் எழுந்துள்ளது”

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் டி.சிவராம் அவர்களின் 19வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி கோரிய போராட்டமும் மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை (28) மாலை நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மற்றும் மட்டு. ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் உருவாக்கம் பற்றிய தேவை தற்போது வடக்கு, கிழக்கில் உணரப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் உறுதியான ஒற்றுமையை வெளிக்காட்டும் வகையில் ஒரு பொது வேட்பாளர் என்ற விடயம் பேசும் பொருளாக மாறி உள்ளது.

தற்போதுள்ள ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு விடயம் சம்பந்தமாக எந்தவொரு தீர்மானத்தையும் இதுவரை எடுப்பதாக இல்லை ஜனாதிபதி தேர்தல் அண்மையில் இடம்பெற உள்ள போதிலும் எந்த ஒரு வேட்பாளரும் தமிழர்களது தீர்வு விடயம் சம்பந்தமான கருத்துக்களை முன்வைக்கவில்லை.

தமிழ் மக்களது வாக்குகளை பெறத் துடிக்கும் வேட்பாளர்கள் இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தை கூட முற்றாக நிறைவேற்றுவேன் என்று கூறுவதற்கு எவருமே தயாராக இல்லாத நிலையில் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் இவர்களை நம்பி ஏமாந்த வரலாறுகள் உள்ளன. எனவே, தமிழ் மக்கள் மத்தியில் கடந்த காலங்களில் எல்லாரும் ஒற்றுபட்டதைப் போன்று தற்போது ஒரு தேவை எழுந்துள்ளது என தெரிவித்தார்.

# சிறுவனை லண்டனுக்கு அனுப்பும் முயற்சி முறியடிப்பு

அங்கு மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப சோதனையின்போது, அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த அதிகாரிகள் இளைஞனை, தனியே அழைத்துச் சென்று இவ்விடயம் தொடர்பில் விசாரித்த போது, இது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் இளைஞன் கூறியுள்ளதுடன், அவரின் உண்மையான தாய் அப்போதும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் காத்திருப்பதாகவும் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உடனடியாக செயற்பட்ட அதிகாரிகள், அவரது தாயாரைத் தேடி கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டபோது, இலங்கையில் தற்போது நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியினால் தனது குடும்பம் கடும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அதனால் இளைஞனின் நலன் கருதி, இவ்வாறு வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல முயன்றதாகவும் கூறியுள்ளார். குறித்த பெண்கள் இருவரும் முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு பிரிவினரிடம்

இந்த விசாரணைகளின் போது, இங்கிலாந்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது மனைவி மற்றும் மகனின் தகவல்களை வைத்து வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களை தயார் செய்து இலங்கை ஆண் பிள்ளைகளை இங்கிலாந்துக்கு அழைத்து சென்று ஆள் கடத்தல் தொழில் நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “பட்டியல் வெளியானதும் முடிவை அறிவிப்போம்”

இந்த நாட்டில் வாழ்ந்தோம் அதனால் எங்கள் வாக்குகள் வந்து வீணடிக்காமல் யார் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதே யார் இந்த நாட்டை முன்னேற்றக் கூடிய வாய்ப்பு இருக்கின்றதோ அவருக்கு வாக்களித்து எங்களது உரிமைகளைத் தக்கவைத்து மலையகத்தை மேலும் வளர்ச்சியடையத் தேவையான திட்டத்தை வைத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுக்கும் என்றார்.

# சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

குறிப்பாக நம் நாட்டில் சிறுநீரக பாதிப்பை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக நீரிழிவு நோய் உள்ளது. மருத்துவரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவது மற்றும் நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால், உணவில் உப்பு, சர்க்கரை மற்றும் எண்ணெய் அளவைக் குறைப்பதன் மூலம் இந்த நோயிலிருந்து விடுபடலாம். குறிப்பாக ஒரு நாளில் 3, 1/2 லீற்றர் தண்ணீர் பருகுவதன் மூலம் இந்த நோயில் இருந்து விடுபடலாம்” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# உபவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பேரவையால் பரிந்துரை







**பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான்**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு மூவரைப் பரிந்துரை செய்வதற்கான விசேட பேரவை ஒன்றுகூடல் 2024.04.29ஆம் திகதி பேராசிரியர் கொலின் என் பீரிஸின் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கொழும்பில் உள்ள Academic Program Centre இல் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணபத்தார்களுக்கு ஏழு அளவுகோல்களின் (Criteria) கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரைத் தெரிவு செய்தனர். இதன் அடிப்படையில் முதலாவதாக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், இரண்டாவதாகப் பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, மூன்றாவதாகப் பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப் ஆகியோர் அதிக புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது பதவிக்காலம் எதிர்வரும் 2024.08.09 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர் அவர்கள் விண்ணப்பங்களுக்கான அழைப்பைக் கடந்த 2024.02.08ஆம் திகதி விடுத்திருந்தார். அதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம்.முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழு பேர் விண்ணப்பித்திருந்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இம்முறை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருந்தனர்.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே இருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை. கடந்த 2021.08. 09ஆம் திகதியன்று பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் 5ஆவது உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். இன்று தெரிவு செய்யப்பட்டுள்ள குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி ஆறாவது உபவேந்தராக நியமிப்பார்.

# இடி விழுந்ததில் ஒருவர் பலி

**யது பாஸ்கரன்**

முல்லைத்தீவு மாவட்டம் ஐயங்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐயங்கன்குளம் பகுதியில், திங்கட்கிழமை (29) மாலை மின்னல் தாக்கி, இடி விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மழை பெய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், மரத்தின் கீழே நின்றிருந்தவர்கள் மேலே இடி விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் ஐயங்கன்குளம் பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளியும் மூன்று பிள்ளைகளின் தந்தையுமான காளிமுத்து சண்முகராஜா (49) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதுடன், ஐயங்கன்குளம் - புத்துவெட்டுவான் பகுதியைச் சேர்ந்த மகேந்திரன் பிரபாகரன் (26) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில், மல்லாவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஐயங்கன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளியில் 77 பேர் உயிர் மாய்ப்பு

**சுப்ரமணியம் பாஸ்கரன்**

கிளிநொச்சி மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டு 45 ஆண்களும் 32 பெண்களும் தவறான முடிவெடுத்து தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போது தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

குறிப்பாகத் தொழில் வாய்ப்பின்மை, போதைப்பொருள் பாவனை, மன அழுத்தம் மற்றும் குடும்ப வன்முறை என பல்வேறு காரணங்களால் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்திற்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஆண்டில் 45 ஆண்களும் 32 பெண்களும் தவறான முடிவெடுத்து தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் 41 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 28 பேரும் இவ்வாறு கடந்த ஆண்டில் தவறான முடிவு எடுத்து தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக பொலிஸ் திணைக்களத்தின் தகவல் மூலம் அறிய முடிகின்றது.

# புதிய மதுபானசாலையால் திகனையில் பதற்றம்

**ஷேன் செனவிரத்ன**

திகன நகரில் உள்ள மதுபானக் கடைகளுக்கு மேலதிகமாக, மற்றுமொரு மதுபானக் கடை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதியைச் சேர்ந்த பௌத்த தேரர்கள் மற்றும் பொதுமக்கள் மதுபானக் கடைக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், திங்கட்கிழமை (29) ஈடுபட்டுள்ளனர்.

கண்டியில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் மதுபான அனுமதிப்பத்திரத்தை வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அந்த அனுமதிப் பத்திரத்தின் ஊடாக திகன- மடவளை வீதியிலுள்ள ஓரிடத்தில் மதுபானசாலை திறக்கப்பட்டது. அதற்கே எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், மதுக்கடைக்கு ஆதரவாகச் சிலர் வந்ததால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தெல்தெனிய பல்லேகல மற்றும் மெனிக்கின்ன பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஸ்தலத்துக்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

# ஜப்பான் அமைச்சர் வருகிறார்

ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளார்.

மே 04-05 வரை இரு நாட்களும் இலங்கையில் தங்கியிருப்பார்.

இந்த விஜயத்தின் போது, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை மரியாதை நிமித்தமாகச் சந்திக்க உள்ளார்.

மேலும் இதன்போது ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது குழுவினர், வெளிநாட்டு



அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

# சவூதிக்கான புதிய தூதுவருக்கு கௌரவிப்பு





**எம்.எப்.றிபாஸ்**

சவூதி அரேபியாவிற்கான இலங்கையின் புதிய தூதுவராகப் பதவியேற்கவுள்ள சட்டத்தரணி அஷ் ஷெய்க். அமீர் அஜ்வாட்டை கௌரவிக்கும் நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் கொழும்பு இந்தியன் சமர் டிரெஸ்டோரண்டில்' வியாழக்கிழமை (25). இடம்பெற்றுள்ளது .

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், மூத்த ஊடகவியலாளருமான என். எம். அமீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் போரத்தின் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

“ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு

# சர்வதேச கண்காணிப்பு அவசியம்”



**எஸ்.நிதர்ஷன்**

ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையைக் கோரும் ஜி.எல்.பீரிஸ் தமிழ் மக்களுக்கும் சர்வதேச உதவியுடன் நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டுமெனத் தெரிவித்துள்ள முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு ‘சர்வதேச ஒத்துழைப்பும் கண்காணிப்பும் அவசியம்’ என்ற பீரிஸின் கருத்தை மகிழ்வுடன் வரவேற்பதாகவும் கூறியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் திங்கட்கிழமை (29) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஈஸ்டர் தற்கொலை தாக்குதல் மூன்று தேவாலயங்களிலும் நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலும் நடைபெற்றது. இதில் 300 பேர் வரை உயிரிழந்தனர். 500 பேர் வரை படுகாயமடைந்தனர். இது கடந்த ஐந்தாண்டுகளாகக் கொழும்பு அரசியல் தளத்தில் பேசுபொருளாக உள்ளது. இதுவரை விசாரணை அறிக்கை வெளிவரவில்லை. இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் மூன்று நாட்கள் விவாதமும் அண்மையில் நடைபெற்றுள்ளது. மூன்றாம் நாள் (26.04.2024) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாகிய தாங்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்களுக்கோ நாட்டின் ஏனைய மக்களுக்கோ நம்பிக்கை கிடையாது. விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பும் சர்வதேச தரப்பின் கண்காணிப்பும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணைக்கான விசேட பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். விசாரணை பூரணமாக அமைய வேண்டும்.

சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது ஒன்றும் புதிதல்ல. முன்னர் உதலாகம ஆணைக்குழு விசாரணைகளில் இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது.


1948ஆம் ஆண்டு 14ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். என்ற மிக முக்கியமான கருத்துகளை தெரிவித்துள்ளீர்கள்.

நீதியை நிலைநாட்ட தாங்கள் துணிச்சலுடன் தெரிவித்த இக்கருத்துகளுக்குத் தமிழினம் தலைவணங்குகிறது. உலகப் பிரசித்திபெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர் நீங்கள். பலநூறு மாணவர்களுக்கு சட்டம் கற்பித்தவர் நீங்கள்.

சட்டத்தின் மூல தத்துவங்களில் முக்கியமானது சட்டம் அனைவருக்கும் சமம் மற்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதுடன் தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி என்பதையும் நாம் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை.

எனவே, உயிர்த்த ஞாயிறன்று பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்க தாங்கள் கூறிய அதே அடிப்படையில் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழ் மக்களுக்கும் நீதி வழங்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கலப்புப் பொறிமுறை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதைப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் பல்லாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாலும் பல்லாயிரம் பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்கப் பாராளுமன்றத்தில் பேசி வழியேற்படுத்துவீர்கள் என நம்புகின்றோம் என்றார்.

# ‘டியூப் லைட்’டை விழுங்கிய கைதி




ஐந்து வருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, தும்பர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் ட்யூப் லைட்டை விழுங்கியதன் காரணமாகக் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கம்பளை பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய ஒருவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு 2022ஆம் ஆண்டு அவருக்கு ஐந்து வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வயிற்றில் ஏற்பட்ட வீக்கம் மற்றும் வலி காரணமாகக் குறித்த கைதி கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் அவரது வயிற்றின் ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ள ப்படவுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தன்னிடம் கைத்தொலைபேசி இருக்கிறதா என கேட்டு இரண்டு சிறை அதிகாரிகள் தன்னை அறைக்கு அழைத்துச் சென்று தாக்கியதாகவும். இதனையடுத்தே அந்த அறையில் இருந்த டியூப் லைட்டை கழற்றி கடித்து விழுங்கியதாகவும் பொலிஸாரிடம் கைதி தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பலகொல்ல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# காணாமல் போனவர் சடலமாக மீட்பு

கல்குடா - பாசிக்குடா கடலில் குளித்துக் கொண்டிருக்கும்போது காணாமல் போன ஒருவர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளுக்குப் பின்னர், நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாகத் திங்கட்கிழமை(29) மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த குழுவொன்று பாசிக்குடா கடலில் ஞாயிற்றுக்கிழமை(28) குளித்துக் கொண்டிருந்தபோது அதில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# விபத்தில் ஒருவர் பலி

**ரஸீன் ரஸ்மின்**




புத்தளம் - அநுராதபுரம், ஏ-12 வீதி, பண்டுலுகம பகுதியில் தனியார் பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் ஞாயிற்றுக்கிழமை (28) மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் அநுராதபுரம்-பண்டுலுகம பகுதியைச் சேர்ந்த 43 வயதான கே.எம்.சமிந்த லால் என்ற நபரே உயிரிழந்துள்ளார் என அநுராதபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# “பஸ்களை கேட்டுள்ளனர்”

எதிர்வரும் மே தின பேரணியை முன்னிட்டு பல அரசியல் கட்சிகளும் பஸ்களை கோரி விண்ணப்பித்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த கோரிக்கைகளுக்கு அமைவாக, கட்சிகளுக்குத் தேவையான பஸ்களை வழங்குமாறு அனைத்து டிப்போக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை கூறியுள்ளது.

விசேட சுற்றுலாப் பயணங்களுக்கான பஸ் கட்டணத்தின் அடிப்படையில் இவை கட்சிகளுக்காக வழங்கப்படவுள்ளன.

இதனிடையே, இம்முறையும் பல அரசியல் கட்சிகளால் மே தினக் கூட்டங்களுக்காக பஸ்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# பட்டதாரிகள் போராட்டம்






**எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்**

அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமெனக் கோரி வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தினால் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக போராட்டமொன்று, திங்கட்கிழமை(29) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் தமக்கான வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி, வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

இதற்கமைய, கோரிக்கைகளை வலியுறுத்தி அரசியல்வாதிகளுக்கும் மகஜரின் பிரதிகளை அனுப்பி வைக்க உள்ளதாகவும் பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தமது கோரிக்கைகளை அரசாங்கம் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் இல்லையேல் தொடர்ந்து தாம் பாரிய போராட்டங்களை நடாத்த உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# மரக் குற்றிகளை கடத்திய இருவர் கைது

**நிதர்ஷன் வினோத்**

யாழ்ப்பாணம்-மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் பாலை மற்றும் முதிரைக் குற்றிகள் சட்ட விரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டில் இருவர், யாழ். மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து முதிரை மற்றும் பாலை மர தீராந்திகள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்டதாக வனவள பாதுகாப்பு திணைக்களத்திற்குக் கிடைத்த தகவலுக்கமைய திணைக்களத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றை சனிக்கிழமை (27) சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது 30 முதிரை மரகுற்றிகள் மற்றும் 33 பாலை மர தீராந்திகள் மீட்கப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

# EPF வட்டி வீதம் அதிகம்




ஊழியர் சேமலாப நிதியத்திற்காக வழங்கப்படும் வட்டி வீதத்தை 9 சதவீதத்தில் இருந்து 13 சதவீதமாக உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

“ஊழியர் சேமலாப நிதியம் நம் நாட்டில் மிகப்பெரிய நிதியமாகும், 27 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். 2023ஆம் ஆண்டுக்காக ஊழியர் சேமலாப நிதியம் ஊடாக முதலீடு செய்து ஈட்டிய பணத்தில் 9 சதவீதத்திற்குப் பதிலாக 13 சதவீதத்தை வட்டியாக செலுத்தத் தயாராக உள்ளோம்.

குறைந்தபட்ச தொகையாக 9 சதவீத வட்டியை வழங்க முடியுமாக இருந்தது. ஆனால், அரசாங்கம் 13 சதவீதத்தைச் செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இது அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும், அதன் உறுப்பினர்களுக்கும் இது வெற்றியாகும். இந்த நிதியை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் லாபத்தின் நியாயமான பகுதி உறுப்பினர்களுக்கு செல்கிறது" என்றார்.

# சனத்தொகை வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கம்

நமது நாடு, அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடாகும். இதன் பொருளாதாரமானது விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, சுற்றுலா போன்றவற்றில் தங்கியுள்ளது. இலங்கையின் பிரதான மூல வளமாக சனத்தொகை காணப்படுகின்றது. இச்சனத்தொகை பற்றி அவதானிக்குமிடத்து ஆரம்பக்காலங்களில் இருந்து இன்றுவரை அதன் நிலையில், மாறுபட்ட போக்கினை காட்டி நிற்கின்றது.

உலக சனத்தொகையில் 0.27 சதவீத சனத்தொகை வகிபங்கினை இலங்கை காட்டி நிற்கின்றது. உலகளாவிய ரீதியில் 58வது நாடாக இலங்கை விளங்குகின்றது. இங்கு ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பில் 335 பேர் வாழ்கின்றனர். இலங்கையின் இன்றைய சனத்தொகை வளர்ச்சி வீதம் 2019ஆம் ஆண்டில் 0.33 சதவீதமாக இருந்தது.

எனினும், அண்மைய காலங்களில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. அதில், தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டு, திடீரென மரணமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவற்றுக்குப் பிரதான காரணமாக, உப்பு, சீனி, எண்ணெய் ஆகியன அடங்கிய உணவுப் பொருட்களை அதிகமாக உண்ணுதல் ஆகும். அத்துடன், போதியளவில் உடற்பயிற்சி செய்யாமையும் திடீர் மரணத்துக்கு வித்திட்டுவிடுகிறது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடி காரணமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாமல், பல்வேறு நோய் நிலைமைகளுக்கு ஆளாகி மனநல பிரச்சினைகள் அதிகரிப்பது போன்ற காரணங்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில், நாட்டில் ஆண்டு சராசரி இறப்பு எண்ணிக்கை 140,000ஆக காணப்பட்டது.

அந்த எண்ணிக்கை தற்போது, 180,000ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாகப் பிறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாகப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவின் சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் சட்டத்தரணி லக்சிக்கா கணேபொல தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டளவில், நாட்டில் ஆண்டு பிறப்பு எண்ணிக்கை சுமார் 325,000ஆக காணப்பட்டது. இந்த நிலையில், அந்த தொகை தற்போது 280,000 வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இதேவேளை, பொருளாதார நெருக்கடி மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக இளைஞர் யுவதிகள் விவாகரத்து செய்து கொள்ளும் நிலைமை அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, கிளிநொச்சி மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டு 45 ஆண்களும் 32 பெண்களும் தவறான முடிவெடுத்து தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளனர். குறிப்பாகத் தொழில் வாய்ப்பின்மை, போதைப்பொருள் பாவனை, மன அழுத்தம் மற்றும் குடும்ப வன்முறை என பல்வேறு காரணங்களால் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர்.

ஒரு நாட்டின் சனத்தொகை அதிகரித்தாலும் பிரச்சினை குறைந்தாலும் பிரச்சினையாகும். அத்துடன், முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து, பிறப்பு சதவீதம் குறைந்தாலும் பிரச்சினையாகும் என்பதால், சனத்தொகை விவகாரத்தில் கூடுதல் கவனத்தைச் செலுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தல் முக்கியமாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# முன்கூட்டியே தயாராகாததால் தடுமாறும் முஸ்லிம் அரசியல்

மொஹமட் பாதுஷா

முஸ்லிம் கட்சிகளும் அந்தக் கட்சிகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்களும் அடுத்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான முடிவுகளை எடுப்பதில் தடுமாறுவதையும், சில விடயங்களில் அவசரப்படுவதையும் கூர்ந்து நோக்குவோரால் அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலா பாராளுமன்றத் தேர்தலா முதலில் நடைபெறும்? அவ்வாறு நடைபெற்றால் நாம் எவ்வாறான வியூகத்தை அமைப்பது? ஏந்த தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்வது? தேர்தலுக்கான நிதியை எங்கிருந்து பெறுவது?

யாரைப் போட்டியிட வைப்பது? யாரை நீக்கிவிடுவது? என்று முஸ்லிம் அரசியல் அணிகளின் தலைவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதேவேளை, இந்த முறை என்ன பொய்யைச் சொல்லி வாக்குக் கேட்பது? எப்படி மக்களைப் பரப்புரை ரீதியாக மயக்கலாம்? எவ்வாறான உணர்ச்சிப் பேச்சுக்களைப் பேசலாம்? மீதமுள்ள காலத்தில் ஏதாவது செய்ய வாய்ப்பிருக்கின்றதா? என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமையைப் போட்டுப் பிய்த்துக் கொண்டு, பதறியடித்துக்கொண்டு ஓடித் திரிகின்றனர்.

வெளியிலுள்ள சில ‘புதுவரவுகள்’ பிரதிநிதித்துவ அரசியலுக்குள் நுழைவதற்கு ஆலாய்ப் பறக்கின்றன.

தலைவர்களிற்கு நல்ல வேட்பாளர்கள் இல்லாத வறுமை, நிதிசார் தேவை என்பவற்றைப் பயன்படுத்த அவ்வாறானவர்கள் முனைகின்றனர். மறுபுறத்தில், தோல்வியடைந்து இந்த முறையோடு வீட்டுக்கு செல்லவுள்ள எம்.பிக்களின் இடத்தையும் இன்னும் சிலர் குறிவைத்துள்ளனர்.

இதுவெல்லாம் எதன் காரணமாக நடக்கின்றது என்பதை நாம் இதற்கு முன்னர் வெளியான பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதாவது, மீண்டும் ஒரு நாள் இந்த மக்கள் முன் வந்து வாக்குக் கேட்டு நிற்க வேண்டும் என்ற யதார்த்தத்தை முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்கூட்டியே உணர்ந்து செயற்பட்டிருந்தால் இந்த குழப்பம் வந்திருக்காது.

தாம் தலைவராகப் பதவி வகித்த காலத்தில், எம்.பியாக பதவி அதிகாரத்தில் இருந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், உரிமைகள், அபிலாஷைகள், பொறுப்பு வெறுப்புக்களுக்காக நியாயமான அடிப்படையில் குரல் கொடுத்து வந்திருந்தால், அவற்றை இம்மக்களுக்குப் பெற்றுக் கொடுத்திருந்தால். மக்கள் அந்த அரசியல்வாதிக்கு இந்த தேர்தலும் நிச்சயம் வாக்களிப்பார்கள்.

அப்படிச் செய்திருந்தால். இப்படிப் பதற்றப்படத் தேவையும் இல்லை. பொய் மூட்டைகளைத் தயார் செய்ய வேண்டியதும் இல்லை. ‘இந்தப் பெயருடைய எம்.பி. இந்தக் கட்சியில் இந்தச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்’ என்ற தகவலை வெளியிட்டால் மட்டுமே போதுமானது. மக்கள் தானாக முன்வந்து வாக்களிப்பார்கள்.

ஆனால், அந்த நிலைமை முஸ்லிம் அரசியலில் இல்லை என்பது பட்டவர்த்தனமானது. அதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் கட்சிகள் சார்பான எம்.பிக்கள் மட்டுமன்றி, பெரும்பான்மைக் கட்சிகள் ஊடாக பிரதிநிதித்துவ அரசியல் செய்கின்ற முஸ்லிம்களும் முன்கூட்டியே செய்திருக்கவில்லை.

ஆகையால், கடைசி நேரத்தில் பரீட்சைக்குத் தயாராகின்ற மாணவன், இருக்கின்ற சொற்ப நாட்களுக்குள் எதைப் படிப்பது, எவ்வாறு படிப்பது, எவ்வாறு சித்தியடையலாம் என தடுமாறுவதற்கு சமமான பதற்றத்தை, தடுமாற்றத்தை முஸ்லிம் அரசியல்வாதிகளிடையே காண முடிகின்றது. முஸ்லிம் கட்சிகளின் நிலையும் இதுதான்.

உண்மையாகச் சொன்னால் தற்காலத்தில், ‘இலங்கையின் முஸ்லிம் மக்களுக்கான அரசியல்’ என்று எதுவும் இல்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கான, அவர்களின் இருப்புக்கான அரசியல்தான் வயிறு புடைக்க வளர்ந்து கிடக்கின்றது என்பதை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சரி அதனையும் தாண்டி, முஸ்லிம் சமூகத்தைச் சூழ்ந்துள்ள இவ்வரசியல் பற்றிப் பேசுவதாயின் நான்கு விடயங்கள் குறிப்பாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனலாம். முதலாவது முஸ்லிம் கட்சிகள் அவசரப்படக் கூடாது. எந்தத் தேர்தல் நடைபெறும் என்று இன்னும் உறுதியாக அறிவிக்கப்படாத நிலையில் தேர்தல் வியூகங்களை வகுப்பதற்கு அவசரப்பட்டு, தடுமாறிக் கொண்டிருக்கக் கூடாது.

அதற்குப் பதிலாக, மீதமாக இருக்கின்ற காலத்திலாவது மக்களுக்கு எதையாவது செய்ய முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம், மக்களுக்கான சேவை என்பது ஐந்து கிலோ அரிசிப் பொதியும் ஐயாயிரம் ரூபாய் நன்கொடையும் அல்ல.

இன்னும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கட்சிகள் பரந்துபட்ட விடயங்களை விவாதித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில், முஸ்லிம் கட்சிகளும் அணிகளும் தமது தனித்துவத்தை, கூட்டுப்பலத்தை, பேரம் பேசும் ஆற்றலை வளர்ப்பது பற்றிச் சிந்திக்காமல், எந்த பெருந்தேசியக் கட்சியுடனாவது ஓடிச் சென்று இணைந்து கொள்வதற்கு அவசரப்படத் தேவையில்லை.

இரண்டாவது விடயம், பல முஸ்லிம் எம்.பிக்களுக்கு இம்முறை தேர்தலில் தோற்றுப் போவோம் என்ற பயமுள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர் எனலாம்.

இருபது வருடங்களாக அல்லது முப்பது வருடங்களாக எம்.பிக்களாக பதவி வகிக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் இருக்கின்றனர். ஆனால். இது காலவரை இந்த சமூகத்தின் நீண்டகாலப் பிரச்சினைகள் ஒன்றைத்தானும் அவர்கள் தீர்த்து வைத்ததில்லை. அபிலாசைகளை வென்று கொடுத்த வரலாறும் கிடையாது.

அரசியலில் அவர்கள் பதவிகளைச் சுகித்தார்கள், உழைத்தார்கள், தியவன்ன ஓயாவுக்கு சென்று வந்தார்கள், கதிரைகளைச் சூடாக்கினார்கள் என்பதைத் தவிர பெரியதாகப் பெருமையாகச் சொல்லிக் கொள்வதற்கு ஒன்றுமில்லை.

அதேபோன்று ‘இவர்களை விடச் சிறப்பாகச் செயலாற்றுவோம்’ என்று கூறி எம்.பியாக வந்த புதியவர்களின் நிலையும் இதுதான். எனவே, இவர்கள் இப்போது எதனைச் சொல்லி மக்களிடம் வாக்குக் கேட்பது? எத்தனை முறை அதேபொய்களைக் கூறுவது? இந்த முறையும் நம்முடைய வித்தை பலிக்குமா என்ற கடுமையான குழப்பத்தில் உள்ளனர். சில எம்.பிக்கள் தாங்கள் காலாவதியாகப் போவதைக் கண்கூடாகக் காண்கின்றனர். எனவே, இந்த தடுமாற்றத்தின் அடிப்படையில், தங்களது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சமூகத்தைப் பிழையாக வழிநடத்தக் கூடாது. ‘அந்த பெருந்தேசிய தலைவர் நல்லவர், இவர் கெட்டவர்’ என்று அறிக்கை விடக் கூடாது. உங்களுக்கு எம்.பி. பதவியோ பணமோ தேவை என்றால் அதற்காக நீங்கள் முஸ்லிம் சமூகத்தை பலிக்கடாவாக்க இனியும் முயலக் கூடாது.

மூன்றாவது விடயம், முஸ்லிம் கட்சித் தலைவர்களான றவூப் ஹக்கீம், றிசாட் பதியுதீன், அதாவுல்லா போன்றவர்கள் இந்தத் தருணத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தை ஏற்க வேண்டியுள்ளது.

தாங்கள் இந்த சமூகத்தின் தலைவர்கள் என்ற பொறுப்பைக் கால்வாசி அளவுக்குக் கூட தாங்கள் நிறைவேற்றவில்லை என்பதையும் தங்களுடைய கட்சிகள் சமூகத்தின் அபிலாசைகளை வென்றெடுக்க உதவவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ள வெண்டும்.

கடந்த காலங்களில் உங்களால் ‘நல்லவர்’ என மக்கள் மக்கள் மத்தியில் சிபாரிசு செய்யப்பட்ட அரசியல்வாதிகள்தான், பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் சென்று, இந்த சமூகத்தின் அரசியலைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வதுடன் மீண்டும் அதே தவற்றைச் செய்யக் கூடாது.

அதேபோன்று, தேர்தல் உத்தியோகபூர்மாக அறிவிக்கப்படாதிருக்கின்ற சந்தர்ப்பத்தில் மிக நிதானமாகச் செயற்பட வேண்டும். கட்சியின் எம்.பிக்களோ தாங்களோ தனிப்பட்ட டீல்களை மேற்கொள்ளாதிருப்பதையும், இந்த தருணத்தையாவது பயன்படுத்தி முஸ்லிம் மக்களின் ஒன்றிரண்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முன்வர வேண்டும்.

நான்காவது விடயம், பெரும்பான்மைக் கட்சிகளில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் பற்றியது. அவர்கள் பிரதான பெரிய கட்சிகளின் உறுப்பினர்கள். அவர்களது அரசியலும் தனித்துவ கட்சிகளின் அரசியலும் வேறுபட்டது. அவர்களுக்கு முஸ்லிம்களின் வாக்குகள் மட்டுமன்றி சிங்கள, தமிழ் மக்களின் வாக்குகளும் தேவை என்பதே யதார்த்தம். ஆனால், அதற்காக இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் எல்லோருக்கும் சார்பான பெரும்பான்மைத் தலைவர் இவர்தான், அவர் பாதகமானவர் என்று கொழும்பில் இருந்து கொண்டு அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கக் கூடாது. தங்களுடைய அரசியலுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் மிகைப்படுத்தப்பட்ட கருத்தியலை விதைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இந்த தருணத்தில், முஸ்லிம் சிவில் அமைப்புக்கள், புத்திஜீவிகள், உலமா சபை போன்ற மத அமைப்புக்கள் தேசிய அரசியலைப் புரிந்துகொண்டு மக்களை வழிப்படுத்த வேண்டும். குறிப்பாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் மற்றும் அரசியலுக்கு வரவேண்டும் இரகசியக் கனவு இல்லாத சமூக செயற்பாட்டாளர்கள் களநிலைமைகளை ஆய்ந்து முஸ்லிம் சமூகத்தை நெறிப்படுத்த வேண்டியுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரது ஆற்றாமை மற்றையோருக்குத் தெம்பு ஊட்டுவதாக அமையலாகாது. எங்கே ஓர் அப்பாவி விழுகின்றான் என்பதை எதிர்பார்க்கும் நபர்கள் இருக்கின்றார்கள்.

ஒருவரது பலவீனத்தின் மூலம், தாங்கள் பலமானவர்களாக முடியும் என எண்ணுவதே துரோகம். முயற்சி செய்யாமல் தட்டிப்பறிக்க எண்ணும் கூட்டங்கள் ஒருபோதும் சுய பலத்தை, நம்புவதும் இல்லை. துர் குணங்களைக் கைவிடுவதுமில்லை.

ஒழுக்கக்கேடான செயல் உழைப்பதற்கு எளிதான காரியம் என்று எண்ணுபவர்கள். நியாய தர்மங்களை உபதேசங்கள் செய்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

பலவீனமான குணங்களுடன் வாழும் நபர்கள், அதனை ஒருபோதும் ஒத்துக்கொள்வதுமில்லை. துணிச்சலுடன் எழுச்சியும் நெஞ்சினுள் வீரமும் அவசியம். திறமையான விளையாட்டு வீரர்கள் கூட, சில சமயம், தன்னுடன் போட்டியிடுபவர்கள் தன்னை வென்று விடுவார்களோ என எண்ணக்கூடாது. போட்டியில் விட்டுக்கொடுத்தல் கூடாது. துணிச்சலற்றவர்களை வீழ்த்திவிட இரக்கமற்றவர்கள் காத்திருக்கின்றார்கள்.

- பருத்தியூர் பால- வைரவநாதன்

## கடிதங்கள்

### பிரதான வீதியை புனரமைக்க வேண்டும்



மஸ்கெலியா - காட்மோர் பிரதான வீதியானது சுமார் ஒரு வருட காலமாகப் புனரமைக்கப்பட நிலையில் காணப்படுவதால் சாரதிகள் மற்றும் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா, டீசைட் சந்தியில் இருந்து காட்மோர் வரையான பிரதான வீதி மொக்கா பிரதேசத்தில் 03 கிலோ மீற்றர் வரை பாரியளவில் சேதமடைந்து காணப்படுவதால் சாரதிகளும் பயணிகளும் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாகப் பிரதேச மக்கள் காட்டுவழி பாதையைப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.


உரிய நேரத்தில் பேருந்துகளை இயக்க முடியாத நிலை காணப்படுவதாகவும், வாகனங்கள் அடிக்கடி பழுதடைந்து, அந்த வாகனங்களின் பழுதுபார்ப்புக்கு அதிகப் பணம் செலவழித்து அவஸ்தைக்கு உள்ளாகின்றதாகவும் பஸ் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இச்சாலையை உடனடியாக சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- காமினி பண்டார இளங்கந்திலக


# “நமக்கான தேசிய உருவாக்கத்தை கட்டியெழுப்பும் சூத்திரம் எது?

## எழுத்தாளரும் ஊடகவியலாளருமான என்.சரவணனுடனான நேர்காணல்






பிரதாப் தியாகராஜா
ஊடகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்



கேள்வி: ‘மலையக தமிழர்’ என்று தனியான இன அடையாளம் அவசியம் என்பது பற்றி தற்போது பரவலாக பேசப்படுகிறது அது பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

பதில்: நமக்கான இன அடையாளத்தை வரையறுப்பது அவசியமே. இன்று உலகளாவிய பிரச்சினைகளே அடையாளப் பிரச்சினைகளிலேயே மையம் கொண்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தளவில் இனப்பிரச்சினை கூர்மையடைந்த அரசியல் சூழலில் அதிகாரத்துவ இன அடையாளங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அடக்கப்படும் இனங்களும் தமது தனித்துவ அடையாளங்களை நிறுவும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அதன் நீட்சியாக இந்திய வம்சாவளியினரும் தமது இன அடையாளத்தை உறுதி செய்யும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

மலையகம் என்ற அடையாளத்தைத் தான் நானும் பல வருடங்களாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றேன். கூறப் போனால் இன்று நேற்றல்ல சுமார் மூன்று தசாப்தங்களாக இதற்காக நான் உழைத்துமுள்ளேன். அது மட்டுமல்லாமல் மலையகம் சார்ந்த பல அரசியல் பணிகளிலும் ஈடுபட்டுள்ளேன்.

மேலும், எனக்கும் மலையகத்திற்கும் நேரடி தொடர்பு இல்லாவிடினும் என்னை ஒரு மலையகத்தான் ஆகத்தான் எல்லா இடங்களிலும் சொல்லிக் கொண்டுள்ளேன்.

அதைப்பற்றி என்னுடைய மலையக அடையாளம் பற்றிய கட்டுரையிலும் குறிப்பிட்டுள்ளேன். மறைந்த மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரனுடன் நெருங்கி பணியாற்றிய 90களில் அவர் சிறையில் இருக்கும் போது அங்கே சனிக்கிழமைகளில் அவரை பார்த்து விட்டு வருவது வழக்கம். அவர் விடுதலையாகி இயங்கத் தொடங்கிய கால கட்டத்தில் அவர் நம் அனைவரையும் ஒன்றாக இணைத்து மலையகம் என்று கூற வேண்டும் என கூறிய சந்தர்ப்பத்தில் நான் அப்போதே இந்த கேள்வியை அவரிடம் வினவினேன்.

அதாவது எப்படி மலையகத்துக்கு வெளியில் உள்ளவர்கள் அதற்குள் இணைக்கலாம்? அதற்கு அவர் நம் அனைவருக்கும் ஒரு அடையாளம் தேவை என்பதால் மலையகத்துக்கு வெளியில் உள்ளவர்களையும் அந்த அடையாளத்துடன் இணைத்துக்கொள்வதே நல்லது என்று கூறினார்.

அப்போது நான் கூறினேன், இது மிகவும் சிரமமான காரியம், அதற்கு ஒரு நீண்ட பயணம் செல்ல வேண்டும், இதில் நீங்கள் உறுதியாக இருந்தால் இது நிச்சயம் சாத்தியப்படும். நீங்கள் உறுதியாக உழைத்தால் நாங்கள் நிச்சயமாக இதற்காக ஒத்துழைப்போம் என்று நான் கூறினேன். இது நிகழ்ந்து 30 வருடங்கள் ஆகிவிட்டன. அதன் பின்னர் அவர்களால் அந்த கொள்கையை முன்னெடுக்க முடியவில்லை. இன்று கைமீறி போய்விட்டது. காலம் கடந்து விட்டது. மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் “மலையக” அடையாளம் தமது அடையாளம் என்று உறுதியாக கூறுகின்றனர். அப்போக்கைத் தட்டிக் கழிக்க முடியாது.

கேள்வி: மலையகம் என்கிற இன அடையாளம் பற்றி முதலில் பேசப்பட்டது அமரர் சந்திரசேகரன் காலத்தில் இருந்தென்று கூறுகின்றீர்களா?

பதில்: இல்லை, மலையக இன அடையாளம் சம்பந்தமான விடயங்கள் இதற்கு முன்னதாகவே வந்து விட்டன, இருப்பினும் மூன்று விடயங்களை மலையக மக்கள் முன்னணியிடம் நாம் பார்க்கலாம். அதன் அடிப்படையில் அவர்களால் தான் அது கொண்டாடப்பட்டது. அதற்கு பிறகு யாராலும் எந்த ஒரு அரசியல் கட்சியாலும் அது பற்றிப் பேசத் தைரியம் வரவில்லை.

அதில் முதலாவது மலையகத்தினுடைய அதிகார அலகு சம்பந்தமான விடயங்கள். இரண்டாவது மலையகத்துக்கான சுயநிர்ணயம் இந்த இரண்டும் மிக முக்கியமானவை. மூன்றாவதாக இலங்கையின் நான்காவது தேசிய இனமாக மலையகத்தையும் பார்க்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

காரணம் அது வரையில் இலங்கையில் தேசிய இனங்களாக சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று மட்டுமே பார்க்கப்பட்டது. தமிழர்களின் அடையாளத்திற்கு கீழ்தான் மலையக மக்களையும் பார்த்தனர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

கேள்வி: இந்த இன அடையாளத்தில் மலையகத்திற்கு வெளியிலுள்ள இந்திய வம்சாவளி மக்கள் பற்றிய நிலைப்பாடு என்னவாக இருந்தது?

பதில்: மலையக சமூகம் என்று நாம் கூறுவது மலையக புவியியல் பரப்புக்குள் உள்ளவர்களைத் தான். மலையகத்திற்கு வெளியில் வாழும் சமூகம் என்பது மலையகத்தில் இருந்து வந்தவர்கள் மட்டும் அல்ல என்பது முக்கியமானது.

மலையகத்திலும் இன்றும் பரவலாகக் காணப்படும் ஒரு நம்பிக்கை என்னவென்றால், மேல் மாகாணத்தில் குறிப்பாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை உள்ளிட்ட பகுதிகளிலும் ஏனைய மலையகத்திற்கு வெளியில் வாழ்கின்ற இந்திய வம்சாவளியினர் எல்லோருமே மலையகத்தில் இருந்து வந்தவர்கள் என நம்பிக் கொண்டுள்ளனர்.

வேலை வாய்ப்புகளுக்காக வந்தவர்கள் எண்ணிக்கையும் அதில் உண்டு என்பது உண்மை.

இந்த 200 வருடக் காலகட்டத்திற்குள்ளும் அதற்கு பிறகும் மலையகத்துக்கு வெளியில் நேரடியாக இந்தியாவில் இருந்து வேலைக்காக வந்து இங்கு இருத்தப்பட்டவர்கள் ஏராளமானோர் இருக்கின்றனர்.

அவர்களின் சந்ததியினர் பல்கிப் பெருகி இலட்சங்களாக உயர்ந்துள்ளனர். என்னுடைய அம்மா வழி அப்பா வழி இருவருமே அவ்வாறு வந்தவர்கள் தான். எங்களுக்கும் மலையகத்திற்கும் நேரடி தொடர்புகள் இல்லை.

அம்மா வழி வந்தவர்கள் களுத்துறையிலும் என்னுடைய அப்பா வழி வந்தவர்கள் கொழும்பில் இருத்தப்பட்டார்கள். என்னுடைய சமூகம் நகர சுத்திகரிப்பு தொழிலுக்காகக் கொண்டுவரப்பட்டவர்கள்; அவ்வாறானவர்களின் குடியிருப்புக்கள் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், அம்பாறை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, கண்டி, கம்பஹா,வவுனியா, கொழும்பு போன்ற நாடளாவிய மாவட்டங்களில் காணப்படுகின்றன.

கேள்வி : இதற்கான தொடக்கம் பிரித்தானியரின் வருகையின் பின்னர் வந்ததாக கூறுகின்றீர்களா?

பதில்: ஆம், பிரித்தானியரின் வருகையோடு வந்தவர் தான். பிரித்தானியரின் வருகையோடு வந்தவர்களைப் பற்றித் தான் நான் கதைக்கின்றேன்.

வெறுமனே நகரச் சுத்தி தொழிலுக்காக வந்தவர்கள் மட்டுமல்ல இங்கு பல்வேறுபட்ட தொழில்களுக்காக இலங்கைக்கு வந்தவர்கள் இருக்கின்றனர்.

கொழும்பு 13, கொச்சிக்கடையில் இருக்கின்ற தமிழர்கள் எல்லோரும் துறைமுக வேலைகளுக்காகக் கொண்டுவந்து குடியிருத்தப்பட்டவர்கள்.

அது அதுபோல வன்னி போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் குளங்களைக் கட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்டவர்கள். அதுபோல பாதைகள் அமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்டவர்கள் ஆரம்பக் காலங்களில் பாதைகள் அமைத்த அந்தந்த இடங்களிலே குடியமர்த்தப்பட்டவர்களும் இருக்கின்றார்கள்.

அதுபோல திருகோணமலையில் கோட்டையுடன் சம்பந்தப்பட்ட வேலைகளுக்காக 1800களில் அதாவது ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்ட காலப் பகுதிகளில் குடியேற்றப்பட்டவர்கள் இருக்கின்றனர். இவர்கள் எல்லாருமே காலப்போக்கில் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றனர்.

(புதன்கிழமை தொடரும்...)

# நிறைமாத கர்ப்பிணி



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையாக இருந்த அமலாபால், அஜித் - விஜய் உள்பட பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடிகை அமலாபால், தேசாய் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்ட நிலையில் திருமணம் முடிந்த ஒரு சில மாதங்களில் தான் கர்ப்பமாக இருப்பதாக அறிவித்தார்.

தற்போது அவர் நிறைமாத கர்ப்பிணியாக இருப்பதாகவும் இன்னும் ஒரு சில நாட்களில் அவருக்கு குழந்தை பிறந்து விடும் என்றும் கூறப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அவர் புதிய போட்டோஷூட் எடுத்த வீடியோவை தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்து உள்ளார்.

இந்த வீடியோவுக்கு ஆயிரக்கணக்கான லைக்ஸ் குவிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜோதிகாவின் புது முயற்சி



நடிகை ஜோதிகா எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த வீடியோவை தனது இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ள நிலையில் வைரல் ஆகி வருகிறது.

நடிகை ஜோதிகா அண்மையில் எவரெஸ்ட் சிகரத்திற்குச் சென்ற வீடியோவை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில் அவர் எவரெஸ்ட் சிகரத்தை அடைவது, அங்குள்ள ஒரு சிறிய வீட்டில் தங்கியிருப்பது, மின்சாரம் இல்லாத அந்த இடத்தில் சோலார் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை வைத்து வாழ்வது, ட்ரக்கிங் செல்வது, பனி மழையில் நனைவது, அங்கு கிடைக்கும் உணவுகளைச் சாப்பிடுவது, உலகின் மிகச் சிறிய ரன்வே கொண்ட விமான நிலையத்தை அடைவது, உலகின் மிக உயரத்தில் இருக்கும் ஹோட்டலில் சாப்பிடுவது உள்ளிட்ட காட்சிகளைப் பதிவு செய்துள்ளார். இதுவரை வேறு எந்த நடிகையும் செய்யாத புதிய முயற்சி செய்த ஜோதிகாவின் இந்த வீடியோவை பார்த்த ரசிகர்கள் உண்மையாகவே நீங்கள் சிகரத்தை அடைந்து விட்டீர்கள் என்று வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர். நடிகை ஜோதிகா நடித்த ‘சைத்தான்’ என்ற திரைப்படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் தற்போது அவர் ‘ஸ்ரீகாந்த்’ உட்பட இரண்டு ஹிந்தி படங்களில் நடித்து வருகிறார்.

# வாய்ப்பை பறித்த முத்தம்



‘சீதா ராமம்’ திரைப்படம் மூலம் பிரபலமான நடிகை மிருணாள் தாக்கூர், அண்மையில் அளித்த பேட்டியில் பல விடயங்களை மனந்திறந்து கூறினார்.

அவர் கூறுகையில், “காதல் போன்ற நெருக்கமான காட்சிகளில் நடிக்க நான் பயப்படுவேன். அதை எனது பெற்றோரும் ஏற்கவில்லை. நான் ஒரு படத்தில் நடிக்க விரும்பிய போது, அதில் முத்தக்காட்சி சம்பந்தப்பட்டிருந்ததால் நான் விலக வேண்டியிருந்தது.

ஒரு நடிகராக, நீங்கள் அதற்கு தயாராக இருக்க வேண்டும், ஏனென்றால் சில நேரங்களில் அது படத்திற்கு தேவையாக இருக்கும். முத்தக்காட்சிகளில் நடிக்காததால் நான் பல திரைப்படங்களை தவறவிட்டேன். அந்த காட்சி வேண்டாம் என்று சொல்வேன். ஆனால், எத்தனை நாட்கள் இவ்வாறு வேண்டாம் என்று சொல்ல முடியும்? என்று தெரியவில்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ‘ரெட்ட தல’




அருண் விஜய் நடிப்பில் கிரிஷ் திருக்குமரன் இயக்கத்தில் உருவாகும் ‘ரெட்ட தல’ என்ற படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளதாக அருண் விஜய் தனது சமூக வலைத்தளத்தில் அறிவித்துள்ளார்.

அருண் விஜய் இரண்டு முக்கியமான கேரக்டரில் நடக்கும் இந்த படத்தில் நாயகியாக சித்தி இத்னானி, தன்யா ரவிச்சந்திரன் ஆகியோர் நடிக்கின்றனர்.


மேலும் பிக் பொஸ் அல்டிமேட் டைட்டில் வின்னர் பாலாஜி முருகதாஸ் உட்பட பலர் நடிக்கும் இந்த படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைக்க உள்ளார்.

‘தடம்’ திரைப்படத்திற்கு பிறகு அருண் விஜய் இரட்டை வேடங்களில் நடிக்கும் படம் என்பதால் இந்த படத்திற்கு நல்ல எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், புதிய போஸ்டரை அவர் வெளியிட்டுள்ள நிலையில் அந்த போஸ்டர் தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

பாக்தாத்

# ஓரினசேர்க்கைக்கு தடை



ஓரினசேர்க்கைக்கு எதிரான நாடுகளில் ஒன்றாக ஈராக் திகழ்கிறது. இதனை எதிர்க்கும் வகையில் ஈராக் பாராளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இந்தநிலையில், பெரும்பான்மையினர் ஆதரவுடன் ஈராக்கில் ஓரின சேர்க்கை, விபசாரம் உள்ளிட்டவற்றை குற்றமாக அறிவித்து சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, ஈராக்கில் ஓரின சேர்க்கையாளர்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படவுள்ளது.

விபசாரத்திற்கு சிறைத் தண்டனை, திருநங்கைகள், திருநம்பிகளுக்கு 3 ஆண்டுகள் சிறை, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் ஈடுபடும் வைத்தியர்களுக்கு தண்டனை உள்ளிட்டவை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை மறுத்து சீனா சென்றார் எலான்



'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் தலைவரும், 'எக்ஸ்' தளத்தின் தலைவருமான எலான் மஸ்க் இந்திய வருகையை ஒத்திவைத்த நிலையில், சீனாவிற்கு சென்றிருக்கிறார்.

உலகின் டொப் பணக்காரர்கள் பட்டியலில் ஒருவராக இருக்கிறார் 'டெஸ்லா' வாகன உற்பத்தி நிறுவனத்தின் தலைவரான எலான் மஸ்க், 'ஸ்பேஸ் எக்ஸ்' என்கிற விண்வெளி ஆய்வு நிறுவனத்தையும் நடத்தி வருகிறார்.

எலான் மஸ்க் கடந்த வாரம் (ஏப்ரல் 21 மற்றும் 22) இந்தியாவிற்கு வருவதாகத் திட்டமிட்டு இருந்தார். இந்தியாவில் அவருடைய வாகன உற்பத்தி நிறுவனமான டெஸ்லாவின் முதலீடு மற்றும் ஸ்டார் லிங் உள்ளிட்டவைகள் குறித்த அறிவிப்பை இந்திய வருகையின்போது எலான் மஸ்க் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து இந்தியாவில் அவர் செய்யவிருக்கும் முதலீடு குறித்துப் பேசுவார் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இந்தியாவுக்கு வருகை தராமல் சீனாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

# நீருக்கடியில் தபால் பெட்டி



உலகின் கடிதத்தைத் தபால் முறையின் மூலம் அனுப்புவதற்கு வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர். இந்த நிகழ்வை இன்னும் சுவாரஸ்யப்படுத்தும் நிகழ்வுகள் அவ்வப்போது நடைபெறுகின்றன.

அப்படி ஒன்றுதான் கடலுக்கு அடியில் அமைக்கப்பட்டு இருக்கும் தபால் பெட்டி. இந்த பெட்டியில் உங்களுடைய கடிதத்தைக் கடலுக்கு அடியில் நீந்திச் சென்றுதான் போடவேண்டும்.

கடலுக்கு அடியில் அமைந்திருக்கும் இந்த தபால் பெட்டி ஜப்பானின் சுசாமி பே என்ற இடத்தில் உள்ளது. கரையில் இருந்து சுமார் 10 மீட்டர் ஆழத்தில் அமைக்கப்பட்டு இருக்கும் இந்த பெட்டியில், கடிதத்தை அடியில் நீந்திச் சென்றுதான் போடவேண்டும். இதற்காகவே தண்ணீரால் பாதிக்காத தபால் அட்டைகள் தயாரிக்கப்படுகிறது.

அந்த தபால் அட்டையில், ஆயில் பெயிட் மூலம் எழுத விரும்புவதை எழுதிப் போடவேண்டும். இதற்காக பணிபுரிபவர்கள் அதனை எடுத்துக் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைப்பர்.

2002ஆம் ஆண்டு இந்த தபால் பெட்டியின் தனித்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றது. ஒரு நாளுக்கு சுமார் 1,000 முதல் 1,500 வரை தபால் அட்டைகள் இந்த பெட்டியில் போடப்படுகிறதாகக் கூறப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்குச் சாகச பயணமாக, இந்த தபால் பெட்டி வரவேற்பைப் பெற்றது. இந்த தபால் பெட்டியைச் சார்ந்து,தபால் அட்டை உருவாக்குவது, இதற்கான ஆயில் பெயிட் விற்பனை என வணிக ரீதியாகச் சிறந்து விளங்குகிறது.

இந்தியா

# நரிக்குறவர்களிடம் புதிய மரபணு




சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் உயிர் வேதியியல் துறையைச் சேர்ந்த நிபுணர்கள், சென்னையைச் சேர்ந்த நரிக்குறவர் மக்களிடையே ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளனர்.

குறித்த ஆய்வில், அவர்களின் உடலில் புதிய வகை மரபணு மாற்றத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த புதிய வகை மரபணுவானது 'அல்காப்டோனூரியா' அல்லது 'கருப்பு சிறுநீர்' நோயை உருவாக்கும் தன்மை கொண்டது. இந்த புதிய வகை மரபணு தொடர்பாக ஆராய்ச்சி தொடர்ந்து வருகிறது.

பெங்களூர்

# தாய்க்காக நிர்வாண படம் அனுப்பிய மகள்



பெங்களூர்-அம்ருதஹள்ளி பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில் தாயைக் காப்பாற்ற நினைத்த இன்ஸ்டாகிராம் பயன்படுத்தும் 19 வயது இளம்பெண் சிக்கலில் சிக்கியுள்ளார்.

அப்பெண்ணின் வலைத்தள பக்கத்திற்கு இனந்தெரியாத நபரிடமிருந்து ஆபாசமாகச் சித்திரிக்கப்பட்ட தாயின் புகைப்படங்கள் வந்துள்ளன.

இதனால் பயந்துபோன அந்த இளம்பெண், தனது தாயின் மானத்தைக் காப்பாற்ற வேண்டி, யாரிடமும் இதுபற்றி தெரிவிக்காமல் இருந்துள்ளார்.

மேலும், இளம்பெண்ணிடம் அந்த மர்ம நபர், உன்னுடைய நிர்வாண புகைப்படங்களை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் இல்லையென்றால் உனது தாயின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு விடுவேன் என்றும் கூறி மிரட்டியுள்ளார்.

பின்னர் குறித்த இளம்பெண் தன்னுடைய நிர்வாணப் புகைப்படங்களை அந்த நபருக்கு அனுப்பி வைத்துள்ளார். இதையடுத்து, இளம்பெண்ணின் நிர்வாண புகைப்படங்களை அவரது நண்பர்கள், உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விபரம் வெளிச்சத்துக்கு வந்ததன் பின்னர், அப்பெண் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இதன்போதே முழு விபரமும் வெளியானது.

## ஐ.பி.எல்:

# சண்றைசர்ஸை வென்ற சென்னை



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), சென்னையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத் உடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சண்றைசர்ஸின் அணித்தலைவர் பற் கமின்ஸ் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, அணித்தலைவர் ருத்துராஜ் கைகவாட்டின் 98 (54), டரைல் மிற்செல்லின் 52 (32), ஷிவம் டுபேயின் ஆட்டமிழக்காத 39 (20) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 213 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், துஷான் தேஷபான்டே (4), இரவீந்திர ஜடேஜா, மதீஷ பத்திரண (2), டுபேக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய ஷர்துல் தாக்கூர், முஸ்தபிசூர் ரஹ்மானிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 134 ஓட்டங்களையே பெற்று 78 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கைகவாட் தெரிவானார்.

இந்நிலையில் அஹமதாபாத்தில் நடைபெற்ற மற்றைய போட்டியில் குஜராத் டைட்டான்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வீழ்த்தியிருந்தது.

இதேவேளை லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸை லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# டொட்டென்ஹாமை வென்ற ஆர்சனல்



இங்கிலாந்து காற்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாமின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக புகாயோ ஸாகா, கை ஹவேர்ட்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. டொட்டென்ஹாம் சார்பாக கிறிஸ்டியானோ றொமாரோ, சண் ஹெயுங்க்-மின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில் பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 80 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 79 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 75 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லிவர்பூலும், 67 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்டன் வில்லாவுமுள்ளன.

# பாகிஸ்தானின் பயிற்சியாளர்களாக கில்லெஸ்பி, கேர்ஸ்டன்



பாகிஸ்தானின் டெஸ்ட் போட்டிகளுக்கான புதிய பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான ஜேஸன் கில்லெஸ்பி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான பயிற்சியாளராக இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவின் முன்னாள் பயிற்றுவிப்பாளரான கரி கேஸ்டன் பெயரிடப்பட்டுள்ளார்.

இதேவேளை, அனைத்து வகையான போட்டிகளுக்கும் உதவிப் பயிற்சியாளராக பாகிஸ்தானின் முன்னாள் சகலதுறைவீரரான அஸார் மஹ்மூட் செயற்படவுள்ளார்.

மூன்று பயிற்சியாளர்களும் இரண்டாண்டு ஒப்பந்தங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.



## சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான

# முதல் மூன்றில் முஸ்தபிசூர் இல்லை

சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான முதல் மூன்று போட்டிகளுகான பங்களாதேஷ் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் முஸ்தபிசூர் ரஹ்மான் இடம்பெறவில்லை.

நீண்ட காலமாக விளையாடுவதால் குழாமில் முஸ்தபிசூர் இடம்பெறவில்லையென தேர்வுக் குழு உறுப்பினர் ஹனான் சர்க்கார் தெரிவித்துள்ளார்.

இக்குழாமில் அஃபிஃப் ஹொஸைன், மொஹமட் சைபுடீன் ஆகியோர் மீள இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), லிட்டன் தாஸ், தன்ஸிட் ஹஸன் தமிம், தௌஹிட் ஹிரிடோய், மஹ்முட் உல்லாஹ், ஜாகர் அலி, மஹெடி ஹஸன், ரிஷான் ஹொஸைன், தஸ்கின் அஹ்மட், ஷொரிஃபுல் இஸ்லாம், தன்ஸிம் ஹஸன் சகிப், பர்வெஸ் ஹொஸைன், தன்வீர் இஸ்லாம், அஃபிஃப் ஹொஸைன், மொஹமட் சைஃபுடீன்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 30, ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.